

தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா நேற்று நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓவேலி பேரூர்க் கழக பகுதிகளான பெரியசூண்டி, பெரியார் நகர், பார்வுட் கிளவன்ஸ் சீபுரம், எல்லமலை ஆகிய பகுதிகளில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா நீலகிரி மக்களவை உறுப்பினராக மீண்டும் தேர்வுசெய்து வாக்களித்த வாக்காளப் பெருமக்களை நேரில் சந்தித்து கழக நிர்வாகிகளுடன் நன்றி தெரிவித்தனர்.

### காலாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்படும் நிலையில்

# திருவண்ணாமலை - சண்முகா தொழிற்சாலை அரசு மேனிலைப்பள்ளியில் ஆய்வு!

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேற்கொண்டார்!

சென்னை, அக்.8 -

காலாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமது 207ஆவது ஆய்வை திருவண்ணாமலையில் மேற்கொண்டார்.

திருவண்ணாமலை தொகுதியில் அமைந்துள்ள சண்முகா தொழிற்சாலை அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, மாதிரிப் பள்ளி மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உரையாடினார். மாதிரிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 525 பேர் உலகின் தலைசிறந்த உயர்கல்வி நிலையங்களில் இணைந்துள்ளதை குறிப்பிட்டு அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கலந்துரையாடினார்.

காலாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் நிலையில் பள்ளியின் அடிப்படை கட்டுமானங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளியின் கழிப்பறைகளை தூய்மையாக வைத்திருக்குமாறும், கட்டடங்களின் உறுதி தன்மையை ஆய்வுக்கு உட்படுத்துமாறும் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் மாணவர்களுக்கான குடிநீரின் தரத்தையும் பரிசோதிக்குமாறு உத்தரவிட்டார்.

### கத்தார் தலைநகர்

# தோஹா - திருச்சி இடையே கூடுதல் விமானச் சேவை!

## ஒன்றிய அமைச்சருக்கு - கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, அக்.8-

கத்தார் தலைநகர் தோஹாவிற்கும் - திருச்சிராப்பள்ளிக்கும் இடையே கூடுதல் விமானச் சேவை வழங்கிட ஆவன செய்யும்படி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய சிவில் விமானத் துறை அமைச்சர் கிஞ்சரப்பு இராம்மோகன் ரெட்டி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகம் நமது நாடு பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உள்நாட்டுப் பயணிகளுக்கும் விரும்பிப் பயணம் செய்யும் நாடாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது என்று தெரிவித்துள்ளது. இதனால் விமானப் பயணிகளின் எண்ணிக்கை கூடி வருவதால் அதற்கு இணையாக விமானச் சேவையும் வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவிற்கு இந்திய சுற்றுலாப் பயணிகள் விரும்பிச் செல்லும் இடமாக உள்ளது. அங்குள்ள கட்டிடக்கலையின் வளர்ச்சி நிலவளம் சிறப்பான பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் முதலானவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய அம்சங்களைக் கொண்டுள்ளன.

தற்போது தோஹாவிற்கும், திருச்சிராப்பள்ளிக்கும் வாரத்திற்கு ஒரு நேரடி விமானச் சேவை மட்டும் உள்ளது. அதாவது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலை 10.00 மணிக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் ஒன்று மட்டும் இயங்கி வருகிறது. மற்ற தினங்களில் பயணம் செய்யும் பயணிகள் பல்வேறு இணைப்பு விமானங்களைத் தேடி அலையும் நிலை உள்ளது.

மேலும் கத்தார் நாட்டிற்கு தென்னகத்தில் இருந்து குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்து இருந்து அதிக எண்ணிக்கையிலான மக்கள் சென்று பணிபுரிந்து வருகின்றனர். இத்தகைய மக்கள் திருச்சிராப்பள்ளிக்கு நேரடி விமானச் சேவையைப் பெரிதும் விரும்புகின்றனர்.

இதனால், தொடர்ந்து அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப, குறிப்பாக சுற்றுலாவிற்கு உகந்த காலங்களில் தற்போதுள்ள வாரத்திற்கு ஒரு விமானம் என்றுள்ள விமானப் பயண சேவை போதுமானதாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு தோஹா நகருக்கும் திருச்சிக்கும் இடையே மேலும் கூடுதல் பயணிகள் விமானங்களை இயக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. எழுதியுள்ளார்.

### கோலியனூர் கிழக்கு ஒன்றியம்

# தாதம்பாளையம் - இளங்காடு கிளைக் களங்களில் கழக பவள விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி கழகக் கொடியேற்றி நல உதவிகளை வழங்கினார்!

விழுப்புரம், அக்.8 -

விழுப்புரம் தெற்கு மாவட்டம் கோலியனூர் கிழக்கு ஒன்றியம் தாதம்பாளையம் மற்றும் இளங்காடு ஆகிய ஊராட்சிகளில் ஒன்றியச் செயலாளர் பி.தெய்வசிகாமணி தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி கலந்து கொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாவட்ட மருத்துவர் அணித் தலைவர் செந்தில்குமார், மாணவர் அணி சபரிநாதன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல், செயலாளர் கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், துணைத் தலைவர் உதயகுமார், ஒன்றிய நிர்வாகிகள் அவைத் தலைவர் இரா.கண்ணப்பன், சௌந்தர், குணசேகர், ஜெயபால், ஸ்ரீதர்,

மாவட்ட கவுன்சிலர்கள் கேசவன், நகர பொருளாளர் இளங்கோ, ஒன்றிய குழு உறுப்பினர் சௌந்தர், மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன், இலக்கிய அணி வல்லவன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி சுரேஷ் பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், இளைஞர் அணி ராஜசேகர், முத்துக்குமார், பிரபாகரன், கிளைச் செயலாளர்கள் ராமஜெயம், பெரியசாமி, சம்பத், நெசவாளர் அணி செழியன், தகவல் தொழில் நுட்ப அணி எடிட்ராஜ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருசன், மணிவேல், இளங்காடு நிர்வாகிகள் குணா, மாணிக்கம், சதீஷ், பார்த்திபன், கருணா, கோகுல், முரளி, ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் பேரூர்ச் செயலாளர் பா.ஜீவா தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன், பொதுக்குழு உறுப்பினர் டி.என். ஜெ.சம்பத், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி.தெய்வசிகாமணி, தே.முருகவேல், கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழுத் தலைவர் சச்சிதானந்தம், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, பேரூராட்சி நிர்வாகிகள் அவைத் தலைவர் கே.டி. ஜி.சரபோஜி, ரகுமான், அ.கோ.ராஜன், ஜி.பழனி, விஜயா பெரியசாமி, லைட் ராஜேந்திரன், கந்தசாமி, துணைத் தலைவர் அசோக், நகர பொருளாளர் இளங்கோ,மாவட்ட இளைஞர் அணி செ.தினகரன் , பா.கலைவாணன், வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி சுரேஷ்பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.பி.பரத், ஒன்றிய பிரதிநிதிகள் வடிவேல், கஜேந்திரன், ஞானவேல் உள்ளிட்ட வார்டு செயலாளர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கழகச் செயல்வீரர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ரூ 5.57கோடி மதிப்பீட்டில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், துணைச் சேர்மன் ஜெயபாலன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சீத்தாலட்சுமி, முல்லை மற்றும் பலர் உள்ளனர்.

### தாய்க் கழகத்திற்கு முத்து விழா:

# சமூக அரசியல் வடிவம் பெற்று சாதித்துள்ள தி.மு.க.விற்கு பவள விழா!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

**சென்னை, அக். 8-**

**ஒரு நூற்றாண்டிலேயே தன்னால் உருவாக்கப்பட்ட ஓர் இயக்கத்தின் வெற்றியை நேரில் கண்டு மகிழ்ந்த தலைவர் தந்தை பெரியார் - இயக்கம் திராவிடர் இயக்கம் மட்டுமே - அதற்கு முத்து விழா; திராவிடர் இயக்கத்தின் கொள்கைகளை செயல்மலர்களாக்கிப் பவள விழா காண்கிறது தி.மு.க. என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

திராவிடம் என்ற வரலாற்றுக் கடலில், ஏராளமான முத்தும், பவளமும் அணி அணியாக நமக்கு உள்ளதில் அள்ளிக் கொண்டே இருப்பதால்தான், அறிவால் அடிமைப்பட்டு, உணர்வால் மரத்துப்போன நமது திராவிட இனம், கடந்த ஒரு நூற்றாண்டுக்குமேலாக ஏற்றமிகு, 'மான எழுச்சியைக்' கண்டு உயர்ந்து வருகிறது.

**புதிய விடியலைத் தந்த நீதிக்கட்சி!**

'நீதிக்கட்சி' என்று வெகு மக்களால் அன்று எளிமையாக அழைக்கப்பட்ட திராவிடர் இயக்கம், அரசியலில் கால் பதித்து, இழந்த நம் இன உரிமை மனித உரிமைகளை மீட்டெடுத்து ஒரு புதிய விடியலை நாட்டுக்குத் தந்தது!

'திராவிடம் - திராவிடர்' என்பது ஏதோ ஒரு குறுகிய பகுதியோ, குறுகிய எண்ணத்தையோ மய்யப்படுத்தி முளைத்த தத்துவம் அல்ல!

**திராவிடம் ஒரு தத்துவத்தின் பண்பொழில்!**

மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால், மானுடத்தையே தனது நேசிப்புக்குரிய எல்லையாக்கிக் கொண்டு, யாதும் ஊரே, யாவரும் கேளிர், உலகம் ஓர் குலம், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சமத்துவம், உழைப்பையே அளவாகக் கொண்டு உயரும் உன்னத சமநிலை, சம ஈவு இவற்றை உலகெங்கும் விதைத்து வளர்ந்த, வளரும் ஓர் அருமையான எடுத்துக்காட்டாகும்!

108 ஆண்டுகளுக்குமுன் அது பல பெயர்களைச் சூட்டிக்கொண்டே (அவை மக்களால் சூட்டப்பட்டவை) வளர்ந்தது.

சிந்துவெளி நாகரிகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வெளிச்ச நாகரிகம்!

அதற்கு நேர் எதிரான மற்றொரு தத்துவம்தான் ஆரியம்! மனிதர்களை - மனிதர்களாகவே மதிக்காது கீழே தள்ளி, மிருகங்களைவிடக் கேவலமாக்கி, ஆதிக்கம் செலுத்தி, அதற்குப் பாதுகாப்பு அரணாக கடவுள், மதம், ஜாதி, சடங்கு, சம்பிரதாயங்கள், புராணங்கள், இதிகாச போதைகளின் ஆதரவால் பட்டுப்போன நிலையிலும், வேரூன்றி, பளபளப்பை பரபரப்பாகக் காட்டும் ஒரு பாதகத் தத்துவம்!

இரண்டுக்கும்தான் பல நூற்றாண்டுகளாக கருத்தியல் போர் நடைபெற்று வருகின்றது, புத்தர்காலம் முதல்!

அதனை தமிழ்நாட்டில் உணரச் செய்து, அறிவு கொளுத்திய இயக்கம்தான் நூற்றாண்டைத் தாண்டி, சமூகத்தில் ஒருபுறத்தில் ஓர் அறிவுப் போர் நடத்தியும், அரசியலில் அதன் தத்துவங்களைச் செயல்படுத்தி, மானமும், அறிவும், உரிமைகளை மீட்டெடுக்க அரசியல் களமாட்டம் நடத்தும் ஒரு சூழல்; அத்திசையைக் காட்டி, அதில் முன்னோடியாக பாதையைச் செப்பனிட்டு புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றி, சமூகநீதிக் கொடி பறக்கும் புதியதோர் சமூகத்தினைப் படைக்கும் மற்றொரு அரசியல் குழல் என்ற இந்த இரட்டைக் குழல்களைக் கொண்ட ஒரு புதுமை அமைப்பாக நாளும் வரலாறு படைத்து வருகின்றன!

**திராவிடர் கழகம் தோன்றியது!**

நீதிக்கட்சி, பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் என்ற பெயர்களை வரலாற்று அடிப்படையிலும், புதியதோர் உலகு படைக்க திராவிடர் கழகம் என்று மாற்றினார் தந்தை பெரியாரும், அவர்தம் தன்னலம்பாரா தகைசால் தோழர்களும் தொண்டர்களும்!

அதற்கு (திராவிடர் கழகத்திற்கு) கடந்த ஒரு மாதம் முன்பு முத்துவிழா - 80 ஆண்டுகள் - சேலத்தில் பெயர் மாற்றம் அடைந்து!

அது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல; இரண்டின் (நீதிக்கட்சி - பார்ப்பனரல்லாதார் இயக்கம்) கலவையாகி ஜொலித்த தனித்தன்மை கொண்ட இயக்கமாக, "திராவிடர் கழகம்" 1944 இல் சேலத்தில் புத்தாக்கம் பெற்று, புதியதோர் பாதை அமைத்தது.

முந்தைய பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று அழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அரசியல் இயக்கமும், சுயமரியாதை இயக்கம் என்ற சமூகப் புரட்சி இயக்கமாகி, புதிய பரிமாணம் பெற்று வளர்ந்தது!

அதற்கு அய்ந்தாண்டுகளுக்குப் பிறகு, காலத்தின் தேவையாக, திராவிட முன்னேற்றக் கழகமாக அதன் அரசியல் அமைதிப் புரட்சிக்கான திராவிட இயக்கம் மலர்ந்தது.

அந்த முத்தும், பவளமும் இப்போது நமது மக்களுக்கு, இன வரலாற்று வெளிச்சம் பரப்ப தொண்டு செய்து வருகிறது - சாதனை சரித்திரத்தில் சமூக இழிவை நீக்கவும், சமத்துவ சமூகநீதிக்கொடி தலைதாழாது பறக்கவும்.

அரசியல் களத்தில் நின்று போராடும் இயக்கம் தி.மு.க.!

'அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றம்; அனைவருக்கும் அனைத்தும் கிடைத்தலே எமது ஆட்சிக்கான இலட்சிய இலக்கு' என்று பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி, மானுட உரிமைகளை முன்னெடுத்து அரசியல் களத்தில் போராடும் ஓர் இயக்கம் தி.மு.க.

அது 'பவளத்தை' தந்துள்ளது 75 ஆண்டுகளில்!

முத்துவிழாக் கொண்டாடும் அதன் தாய்க்கழகமோ கொள்கை முத்துக்களை மூழ்கி எடுத்து, "முத்துக் குளிக்க வாரீகளா?" என்று மக்களை அழைத்து, மான வீரர்களாக, சமத்துவ மனிதர்களாக, சமூகநீதிப் போராளிகளாக அவர்களைக் களத்தில் இறங்கி கம்பீரத்துடன் உலா வருகின்றது!

உலகில் எங்கும் காணாத ஒரு ஒப்பற்ற தனித்தன்மை பூண்ட இருபெரும் கூர்முனைகளைக் கொண்ட ஓர் அதிசய இயக்கங்கள் இவை!

பன்னூறு ஆண்டுகளில் காணாத சமூக மாற்றம் - ஒடுக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனத்தின் எழுச்சி ஓங்கி, அதன் தத்துவ கர்த்தா முத்தும் பவளமும் மலையாக அணிந்து - "பெரியார் உலக மயமாகிறார்; உலகம் பெரியார் மயமாகிறது!"

வெற்றிகளைத் தம் வாழ்நாளில் கண்டு மகிழ்ந்தவர் தந்தை பெரியார்

**எண்ணிப் பாருங்கள், விரலை மடக்குங்கள்!**

1. உலகில் எந்த ஒரு பகுதியிலாவது ஒரு புரட்சி இயக்கத்தின் கொள்கை வெற்றிகளை அவர்தம் வாழ்நாளில் நேரில் கண்டு மகிழ்ந்து, மறைந்த தலைவர் தந்தை பெரியாரைத் தவிர வேறு உண்டா?

2. அவரால் உருவாக்கப்பட்ட சீடர்களே ஆட்சி அமைத்து, அவ்வாட்சியை, அவர் வாழ்ந்தபோதே, அவருக்கே காணிக்கையாக்கி சட்டமன்றத்தில் - அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ள ஓர் ஆட்சித் தலைமை பிரகடனப்படுத்திய வரலாறு உண்டா?

1929 இல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்களை, இந்த (தி.மு.க.) ஆட்சி நாயகர்களான தந்தை பெரியார்தம் தொண்டர்களின் ஆட்சியால் செயலாக்கம் பெற்று வருகின்றன - 1969 முதல் தொடர்ந்து இன்றைய 'திராவிட மாடல்' ஆட்சி நமது ஒப்பற்ற முதலமைச்சரின் தலைமையில் நடைபெறும் இன்றைய காலகட்டம்வரை சோதனைகளைச் சாதனைகளாக்கி, சாதனை சரித்திரமாக மலரச் செய்து - வெற்றிக் கனிகளாக்கி, மக்களைச் சுவைக்க வைக்கும் வரலாறுதான், இந்த முத்தும், பவளமும்!

"ஆயிரம் ஆண்டெனும் மூதாட்டி
அவள் அணிந்திராத அணி (ஆம், முத்தும், பவளமும்)யாவார்
அவள் அறிந்திராத அறிவாவார் பெரியார்!"
- புரட்சிக்கவிஞர்

உலகம் பெரியார் மயம் -
பெரியார் உலக மயம் -
புரிகிறதா?

இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதையொட்டி இடம் தேர்வு செய்யும் பணிகளை நாமக்கல் மாவட்டம், பொம்மைகுட்டை மேடு, லட்சுமி திருமண மண்டபம் அருகில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் தலைமையில், நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், திட்ட இயக்குநர் கு.செல்வராசு, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் ஆர்.பார்தீபன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சிவக்குமார், நாமக்கல் வட்டாட்சியர் சினிவாசன், நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.